வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 16.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- நேரடி ரொக்க மானியம் போன்ற திட்டங்களை உள்ளடக்கிய **பாரதிய மாடல்** தான், சுயசார்பு இலக்கை நோக்கி, நாட்டை செலுத்தி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக வேளாண் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

- நாளை பிறந்த நாள் காணும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

- புதுச்சேரி விமான நிலையத்தில், **பயணியர் சேவை தினம்,** நாளை கொண்டாடப்பட உள்ளது.

*ே□ாடி-பகிர்வு*

**அனைவருக்கும் ஆதரவு-அனைவருக்கும் வளர்ச்சி-அனைருக்கும் நம்பிக்கை** என்னும் அரசின் தொலைநோக்கு பார்வை, தற்போது மக்களின் அன்றாட வாழ்க்கையில், ஒரு பகுதியாகவே மாறி இருப்பது குறித்து, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் தற்போது டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கப் படுவது குறித்தும், அரசின் நலத் திட்ட உதவிகள் நேரடியாக பயனாளிகளுக்கே வழங்கப்படுவது குறித்தும், மின்சாரம், நாட்டு மக்களின் அடிப்படை உரிமையாக மாறி இருப்பது குறித்தும், அமைச்சர், தமது கட்டுரையில் விளக்கி உள்ளார். இதுதான் **பாரதிய மாடல்** என்றும், அரசே மக்களை அணுகி உதவிகளை வழங்கும் வகையில், குஜராத்தில் ஆரம்பித்து பின்னர் தேசிய அளவில் விஸ்தரிக்கப்பட்ட இந்நடைமுறைதான், 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக மேம்படும் பாதையில் நாட்டை செலுத்தி வருவதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

*சேவை விழா- தூய எரிசக்தி*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை, நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் நாட்டில்

மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர அயராது உழைத்து வருகிறது. புதுப்பிக்க வல்ல, தூய எரிசக்தி துறையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு கொண்டு வந்துள்ள, சாதகமான மாற்றங்கள் குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவை விழா- தூய எரிசக்தி*

**(வாய்ஸ்)**

கடந்த 10 ஆண்டுகளாக, இந்தியாவின் எரிசக்தி துறை, புரட்சிகரமான மாற்றங்களை சந்தித்து வருகிறது. மின் உற்பத்தி திறன் அதிகரிப்பு, சூரிய சக்தி மற்றும் காற்றுவிசை மூலமான மின் உற்பத்தியில் உலகத் தலைமை, புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான பல்வேறு முக்கிய திட்டங்கள் என இந்தியா, தூய, சுயசார்பு எரிசக்தி நாடாக, வேகமாக மேம்பட்டு வருகிறது. தூய எரிசக்தியால் கார்பன் வெளியீடு குறைவது மட்டுமின்றி, சுற்றுச் சூழல் மாசுபாடு இல்லாத வேலை வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதுடன், பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதில் உலக சக்தியாகவும் இந்தியா மேம்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் குஜராத்தில், பசுமை போக்குவரத்து திட்டங்களைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், பசுமை எரிசக்தி மற்றும் பசுமை போக்குவரத்து

துறையில் இந்தியா உலக கேந்திரமாக மேம்படும் என்றார்….

(வாய்ஸ்-மோடி)

*சேவை விழா- தூய எரிசக்தி*

2014-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், இவ்வாண்டு ஜூன் மாதம் வரையிலான கால கட்டத்தில் புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான நாட்டின் மின்சார உற்பத்தி திறன், 226.8 கிகாவாட்டாக, சுமார் 3 மடங்கு அதிகரித்து உள்ளது. தற்போது நாட்டின் மொத்த மின்சார உற்பத்தி திறனில், புதுப்பிக்க வல்ல எரிசக்தி, அணுசக்தி உட்பட, புதைபடிவம் அல்லாத எரிசக்தி ஆதாரங்களின் மூலமான மின் உற்பத்தி திறன், 49 சதவிகிதமாக உள்ளது. சோலார் மின் உற்பத்தியில் இந்தியா, ஜப்பானைத் தாண்டி, உலகின் 3-ஆவது இடத்தை பிடித்துள்ளது.

புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் துறையில், பெருமெடுப்பிலான பல்வேறு திட்டங்களை அரசு அமல்படுத்தி வருகிறது. பிரதமரின் குசும் திட்டம் மூலமாக, விவசாயிகளுக்கு சோலார் பம்புகள் வழங்கப்படுவதால், விவசாயிகளின் அதிகாரப் பங்கேற்பு மேம்பட்டுள்ளது. நாட்டில் 1 கோடி வீடுகளில், மேற்கூரை சோலார் மின் உற்பத்தி வசதிகளை நிறுவும் நோக்குடன், பிரதமரின் சூரிய கர் திட்டம் வெற்றிகரமாக அமலாகி வருகிறது. புதுச்சேரியில் பிரதமரின் சூரியகர் திட்டப் பயனாளி

மணவாளன், எமது செய்தியாளரிடம் பேசுகையில், சூரியகர் திட்டத்தினால் மின் கட்டண செலவை, முற்றிலும் தவிர்க்க முடிந்து இருப்பதாக கூறினார்..

**(வாய்ஸ்-மணவாளன்)**

*சேவை விழா- தூய எரிசக்தி*

நாட்டில் புதிதாக நிறுவப்படும் ஒவ்வொரு சோலார் பேனலும், புதிதாக சுற்றத் தொடங்கும் ஒவ்வொரு காற்றாலையும், பசுமையான, தூய எதிர்காலத்திற்கு மாறுவதான இந்தியாவின் பயணத்தில், புதிய அத்தியாயம் ஒன்றை படைத்து வருகிறது என்றால், அது மிகை அல்ல.

*ஜிஎஸ்டி-விவசாயம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. இதில் குறிப்பாக வேளாண் துறைக்கான, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-விவசாயம்***(வாய்ஸ்)**

வேளாண் துறைக்கான வரி குறைப்பு மூலம், மத்திய அரசு, விவசாயிகளுக்கு, பெரிய அளவில் நிவாரணம் வழங்கி உள்ளது. இதன்

முக்கிய பகுதியாக, டிராக்டர்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. டயர், டியூப், ஹைட்ராலிக் பம்ப் உட்பட, டிராக்டர் உதிரி பாகங்கள் மீதான 18 சதவிகித வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்பாசன கருவிகள் உட்பட பல்வேறு வேளாண் கருவிகளும், உயிரி-பூச்சிக் கொல்லிகள், நுண்ணூட்டச் சத்துக்களும், 12 சதவிகித வரி அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. புரட்சிகரமான இம்மாற்றங்களால், குறிப்பாக, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு, பெரும் பலன் ஏற்பட உள்ளது. வேளாண் கருவிகளின் விலை குறைவதால் சாகுபடிச் செலவுகள் குறைவதும் குறிப்பிடத் தக்கது.

*ரங்கசாமி-வாழ்த்து*

நாளை செப்டம்பர் 17-ஆம் தேதி பிறந்த நாள் காணும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். தன்னலமற்ற சேவை, தொலைநோக்கு தலைமையுடன் கூடிய பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்வு, அனைவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டு என்று, அவர் கூறி உள்ளார். இதே அர்ப்பணிப்பு மற்றும் உழைப்புடன், பிரதமர் திரு நரேந்திர மோடி நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்திருந்து நாட்டிற்கு தொடர்ந்து சேவை புரிய, சொந்த முறையிலும்,

புதுச்சேரி மக்கள் சார்பிலும் தாம் வாழ்த்துவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி விமான நிலையத்தில், **பயணியர் சேவை தினம்** நாளை கொண்டாடப்பட உள்ளது. நாளைய தினம் விமான நிலையத்தில், இலவச மருத்துவ பரிசோதனை முகாம், இரத்த தான முகாம், மற்றும், சிவில் விமான போக்குவரத்து துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்து விளக்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது. குழந்தைகளுக்கான ஓவிய போட்டி, மாணவர் கலை நிகழ்ச்சிகள், மற்றும், **தாயின் பெயரில் ஒரு** மரம் இயக்கத்தின் கீழ், மூத்த பயணிகள் மூலம் மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சியும் இடம் பெற உள்ளது. பயணிகளை பாரம்பரிய முறையில் வரவேற்கவும், **போட்டோ பூத்** போன்ற வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, புதுச்சேரி விமான நிலைய இயக்குநர் திரு ராஜசேகர ரெட்டி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். விமான நிலையத்தில் புதிய ஓடுபாதை அமைப்பதற்கான நில ஆர்ஜித பணிகள் குறித்து, ஓய்வு பெற்ற தாசில்தார் ஒருவர் மூலம், **அடிப்படை ஆவணம்** தயாரிக்கப்படும் என்றும், நில ஆர்ஜித பணிகளை தொடக்க ஏதுவாக, தமிழக அரசுடன், இந்த ஆவணம் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும் திரு ராஜசேகர் மேலும் கூறினார்.

*புதுச்சேரி-பிஜேபி*

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, மாநில பிஜேபி பொதுக் குழுக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக, மத்திய தொழில் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மேக்வால், கட்சியின் மாநிலப் பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஜிஎஸ்டி சீர்திருத்தம் உட்பட, மத்திய அரசின் சாதனைகளையும், அரசுப் பணியிடங்களுக்கு நியமனம் உட்பட புதுச்சேரி அரசின் சாதனைகளையும் பாராட்டி, இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எதிர்கட்சிகளின் கூட்டணி, வாக்குத் திருட்டு போன்ற பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடுவதைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*புதுச்சேரி-விவசாயிகள்*

புதுச்சேரியில், வேளாண் தொழிலாளர் நலச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, 2 ஆயிரம் ரூபாய் மழைக்கால நிவாரணமும், கடப்பாறை, மண் வெட்டி உள்ளிட்ட இலவச உபகரணங்களும் வழங்கப்பட உள்ளதால், பழைய உறுப்பினர்கள் புதுப்பித்துக் கொள்ளவும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் செய்திக் குறிப்பு ஒன்றில் இதைத் தெரிவித்துள்ளார்.

வானிலை

வளிமண்டல சுழற்சிகள் காரணமாக இன்றைய தினம், சேலம், ஈரோடு,வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 22-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, **சென்னை சைதாப்பேட்டை மண்டலம்** உள்ளிட்ட இடங்களில், தலா 12 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

ஆசிய கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று இரவு அபுதாபியில் நடைபெறும் போட்டியில், பங்களாதேஷ்-ஆப்கானிஸ்தான் அணிகள் மோத உள்ளன. இலங்கை-ஹாங்காங் அணிகளுக்கு இடையிலும், ஓமன்-யுஏஇ அணிகளுக்கு இடையிலும், நேற்று நடைபெற்ற 2 போட்டிகளில், முறையே, இலங்கை அணியும், யுஏஇ அணியும் வெற்றி பெற்றன.

ே□ாடி-பரிசுப் பொருள்

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட சுமார் ஆயிரத்து 300 பரிசுப் பொருட்கள், இன்று முதல் ஆன்-லைன் முறையில் ஏலம் விடப்படுவதாக, மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் தெரிவித்துள்ளார். ஓவியங்கள், சிற்பங்கள், கடவுள் சிலைகள், மற்றும் கலைப் பொருட்கள் இதில் அடங்கும். குறிப்பாக இம்முறை, இந்திய பாரா ஒலிம்பிக் வீரர்களால் பிரதமருக்கு பரிசாக வழங்கப்பட்ட விளையாட்டு பொருட்களும் ஏலத்தில் இடம் பெறுகின்றன. இந்த ஏலம் மூலமாக கிடைக்கும் வருவாய், நமாமி கங்கே போன்ற அரசுத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும். அடுத்த மாதம் 2-ஆம் தேதி வரை ஏலம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ெ□ாரீஷியஸ் பிரத□ர்

மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம், இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார். இந்தியாவும்-மொரீசியசும், பொதுவான வரலாறு, மொழி, மற்றும் கலாச்சார மாண்புகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்றும், இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகள், வரவிருக்கும் காலங்களில் மேலும் வலுப்பெறும் என்றும், சமூக ஊடகத்தில் குடியரசு தலைவர் கூறி உள்ளார்.

மொரீஷியஸ் பிரதமர் திரு ராம்கூலம் இன்று காலை புதுடெல்லியில், குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்தார். முன்னதாக அவர், டெல்லி ராஜ்காட்டில் மகாத்மா காந்திக்கும், சதைவ அட்டல் நினைவிடத்தில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கும், மலர் அஞ்சலி செலுத்தினார். மொரீஷியஸ் பிரதமரின் 8 நாள் இந்தியப் பயணம், இன்றுடன் முடிவடைய உள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

நேரடி ரொக்க மானியம் போன்ற திட்டங்களை உள்ளடக்கிய பாரதிய மாடல் தான், சுயசார்பு இலக்கை நோக்கி, நாட்டை செலுத்தி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக வேளாண் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

நாளை பிறந்த நாள் காணும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி விமான நிலையத்தில், **பயணியர் சேவை தினம்,** நாளை கொண்டாடப்பட உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------